**ஜூன் – 20**

# TNPSC துளிகள்

- சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான குறைந்தபட்ச வயதை 15 ஆக ஐக்கிய அரபு அமீரகம் நிர்ணயித்துள்ளது; இதன்மூலம் இத்தகைய விதியை அறிமுகப் படுத்திய முதல் அரபு நாடு என்ற பெருமையை அது பெற்றுள்ளது.
  - 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் தனிப்பட்ட சமூக ஊடகக் கணக்குகளை உருவாக்கவோ, பயன்படுத்தவோ அல்லது இயக்கவோ முடியாது; மேலும் அவர்களால் பதிவிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ, உள்ளடக்கத்தைப் பகிரவோ அல்லது பொதுக் குழுக்களில் இணையவோ முடியாது.
- திரிபுராவின் பழங்குடியின சமூகங்களின் நரம்பு இசைக்கருவியான 'பாரம்பரிய திரிபுரா சரிந்தா'விற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது; இது அதன் தனித்துவமான கைவினைத்திறன் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்காக அறியப் படுகிறது.
  - இந்த அங்கீகாரத்தின் மூலம், திரிபுரா குயின் அன்னாசிப்பழம், ரிசா, பச்ரா (ரிக்னாய்) மற்றும் திரிபுரா சரிந்தா ஆகிய நான்கு புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளைத் திரிபுரா மாநிலம் தற்போது கொண்டுள்ளது.
- ஸ்லோவாக்கியா நாட்டின் உயரிய அரசு விருதான ‘ஆர்டர் ஆஃப் தி ஒயிட் டபுள் கிராஸ், முதல் வகுப்பு’ எனும் விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- முதலைகள் மற்றும் பிற முதலை இனங்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 17 அன்று உலக முதலைகள் தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு “Legacy in Every Scale” என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 17வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை - முதல் கூட்டத்தொடர்

- 17வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் தொடங்கியது.
- மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஆளுநர் உரை எந்தவொரு இடையூறும் இன்றி அவையில் முழுமையாக வாசிக்கப்பட்டது.
- முதன்முறையாக, ஆளுநர் உரையின் தொடக்கத்திலும் முடிவிலும் தேசிய கீதம் இசைக்கப் பட்டது.
- இந்த கூட்டத்தொடர் மாநில வாழ்த்தான 'தமிழ்த்தாய் வாழ்த்து'டன் தொடங்கி, அதனைத் தொடர்ந்து தேசிய கீதத்துடன் ஆரம்பித்தது.
- ஆளுநர் உரையின் இறுதியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கும் முந்தைய மரபிலிருந்து இது ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது.
- மத்திய அரசு சாதிவாரி கணக்கெடுப்புப் பணியை முடித்த பிறகு, தமிழ்நாடு அரசு சமூக நீதி கணக்கெடுப்பை நடத்தும் என்று அறிவித்துள்ளது.
- இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிக்கவும் மாநில அரசு ஒரு விரிவான நிலையான சுற்றுலாவழிக் கொள்கையை உருவாக்கும்.
- கல்வியை பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதற்கான

முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

- தமிழ்நாடு அரசு தனது இருமொழிக் கொள்கையான தமிழ் மற்றும் ஆங்கிலத்திற்கு மீண்டும் தன் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது.
- மும்மொழிக் கொள்கையை நிராகரித்து, பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தை மட்டுமே ஆதரித்து 1968 ஆம் ஆண்டு சி. என். அண்ணாதுரை தலைமையில் நிறைவேற்றப் பட்ட சட்டமன்றத் தீர்மானத்தை அரசு நினைவு கூர்ந்தது.
- சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் வாதாடும் மொழியாக தமிழைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசை சட்டமன்றம் வலியுறுத்தியது.
- சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் அமர்வு ஒன்றை அமைக்கவும் மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளது.
- தேசிய கல்விக் கொள்கை (NEP), 2020-ஐ அரசு கடுமையாக எதிர்க்கும் என்று அறிவித்து உள்ளது.
- தமிழ்நாடு 2036 ஆம் ஆண்டிற்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதை இலக்காக நிர்ணயித்துள்ளது.
- கீழடி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, சிவகளை, அழகன்குளம், அரிக்கமேடு, சாளுவன்குப்பம் மற்றும் பூம்புகார் ஆகிய இடங்களில் அரசு தொல்லியல் ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.
- கீழடி மற்றும் ஆதிச்சநல்லூர் தொல்லியல் தளங்களுக்கு UNESCO உலக பாரம்பரிய தள அந்தஸ்தைப் பெற அரசு முயலும்.




## தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்ட (TAPS) விதிகள்

- தமிழ்நாடு அரசு 'தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை' (TAPS) செயல்படுத்துவதற்கான விதிகள் மற்றும் நடைமுறைகளை 2026 ஆம் ஆண்டு ஜூன் 18 அன்று அறிவித்துள்ளது.
- 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று அல்லது அதற்குப் பிறகு வழக்கமான ஊதிய விகிதத்தில் பணியமர்த்தப்பட்டு, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் உள்ளடக்கப்பட்டு, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சேவையை முடித்த அரசு ஊழியர்களுக்கு TAPS பொருந்தும்.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் தகுதியுள்ள

ஊழியர்கள், TAPS முழுமையாகச் செயல்படும் வரை தற்காலிக மாதாந்திரப் பலனைப் பெறலாம்.

- இந்த தற்காலிகப் பலன், கடைசியாகப் பெறப்பட்ட அடிப்படை ஊதியத்தில் 30% அல்லது ₹10,000 (எது அதிகமோ அது) மற்றும் 60% அகவிலை நிவாரணம் ஆகும்.
- ஓய்வு பெற்ற ஊழியர் இறக்கும் பட்சத்தில், TAPS-இன் கீழ் வழக்கமான குடும்ப ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும் வரை, தகுதியுள்ள குடும்ப உறுப்பினர் தற்காலிக மாதாந்திரப் பலனில் 60%-ஐப் பெறுவார்.
- இத்திட்டமானது நிலை I (உடனடி விலகல்) மற்றும் நிலை II (அறிவிப்பிற்குப் பிந்தைய கூடுதல் விலகல்) என இரண்டு விலகல் நிலைகளை வழங்குகிறது; நிலை I-ஐத் தேர்ந்தெடுப்பது இறுதியானது மற்றும் எதிர்கால TAPS பலன்களை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வரும்.
- தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஆனது, TAPS முழுமையாகச் செயல்படுத்தப்படும் வரை ஊழியர் மற்றும் அரசின் பங்களிப்புகளைத் தொடரும் அதே வேளையில், பரந்த அளவில் பழைய ஓய்வூதியத் திட்டத்தின் (OPS) கொள்கைகளைப் பின்பற்றுகிறது.


**Tamil Nadu Assured Pension Scheme (TAPS): Key Announcements**

- **Assured pension:** 50% of last-drawn basic pay for State government employees
- **Government contribution:** State to bear entire additional pension fund requirement along with 10% employee contribution
- **Dearness allowance:** DA hikes every six months, on par with serving government employees
- **Family pension:** 60% of pension payable to nominated family members after the pensioner's death
- **Gratuity**: Up to Rs 25 lakh for employees retiring or dying during service, based on length of service
- **Minimum pension:** To be provided even to employees retiring without completing the qualifying service period
- **Compassionate pension:** For Contributory Pension Scheme (CPS) employees who retired without pension during the interim period before TAPS
- **Financial commitment:** Additional Rs 13,000 crore contribution to the pension fund
- **Annual outlay:** Around Rs 13,000 crore every year, including Rs 11,000 crore as government contribution

## தமிழ்நாடு அலுவல் ஆய்வுக் குழு

- 17வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காக புதிய அலுவல் ஆய்வுக் குழு (BAC) புனரமைக்கப்பட்டுள்ளது.
- அலுவல் ஆய்வுக் குழு (BAC) என்பது அவையின் தினசரி நிகழ்ச்சி நிரல் மற்றும் சட்டமன்ற அலுவலர்களைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டப்பூர்வ குழுவாகும்.
- இது அரசு மசோதாக்கள், விவாதங்கள், வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகள் மற்றும் இதர அலுவல் ரீதியான விவாதங்களுக்கான நேரத்தை ஒதுக்குகிறது.
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சபாநாயகர் இக்குழுவின் அலுவல் வழித் தலைவராகப் பணியாற்றுகிறார்.

- இக்குழு பொதுவாக சபாநாயகரால் நியமிக்கப்படும் 10 முதல் 17 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் மற்றும் அவையிலுள்ள அரசியல் கட்சிகளின் விகிதாசார பலத்தைப் பிரதிபலிக்கும்.
- இதன் உறுப்பினர்களில் பொதுவாக முதலமைச்சர் (அவைத் தலைவர்), எதிர்க்கட்சித் தலைவர், கட்சி கொறடாக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் இடம் பெறுவர்.
- ஆளுநர் உரைக்கான அட்டவணை மற்றும் வரவு செலவுத் திட்ட விவாதங்களுக்கு ஒதுக்கப் படும் நேரம் உட்பட சட்டமன்றக் கூட்டத்தொடரின் கால அட்டவணையை BAC தீர்மானிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## புதிய உற்பத்தியாளர் விலைக் குறியீட்டுக் கட்டமைப்பு




- இந்திய அரசு உற்பத்தியாளர் விலைக் குறியீட்டுத் (PPI) தரவு மற்றும் திருத்தப்பட்ட

மொத்த விலைக் குறியீட்டுத் (WPI) தொடரை வெளியிட்டுள்ளது.

- ❖ உற்பத்தியாளர் விலைக் குறியீடு (PPI) என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் இறுதி நுகர்வோரை சென்றடைவதற்கு முன்பு, உற்பத்தியாளர்கள் பெறும் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுகிறது.
- ❖ இந்தியாவின் புதிய கட்டமைப்பு வெளியீடு PPI, சோதனை உள்ளீடு PPI மற்றும் சேவை PPI ஆகியவற்றை உள்ளடக்கியது.
- ❖ திருத்தப்பட்ட மொத்த விலை குறியீடு (WPI) ஆனது, 2011-12 ஆம் ஆண்டின் அடிப்படை ஆண்டிற்குப் பதிலாக 2022-23 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்துகிறது; மேலும் இதன் உருப்படிகளின் கூடை எண்ணிக்கை சுமார் 697-லிருந்து 957 உருப்படிகளாக உயர்த்தப் பட்டுள்ளது.
- ❖ சேவை உற்பத்தியாளர் விலைக் குறியீடு ஆனது ஆரம்பத்தில் வங்கி, காப்பீடு, இரயில்வே, விமானப் பயணிகள் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் உள்ளிட்ட ஏழு துறைகளை உள்ளடக்கியுள்ளது.
- ❖ மொத்த விலைக் குறியீடும் (WPI) உற்பத்தியாளர் விலைக் குறியீடும் (PPI) ஐந்து ஆண்டுகளுக்கு ஒன்றாக வெளியிடப்படும், அதன்பிறகு மொத்த விலைக் குறியீடு (WPI) படிப்படியாக நிறுத்தப்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## புதிய மேம்பாட்டு வங்கி – உஸ்பெகிஸ்தான்





- ❖ உஸ்பெகிஸ்தான் புதிய மேம்பாட்டு வங்கியின் (NDB) 10-வது உறுப்பு நாடாகவும், மத்திய ஆசியாவிலிருந்து இதில் இணையும் முதல் நாடாகவும் இணைந்துள்ளது.
- ❖ உள்கட்டமைப்பு மற்றும் நிலையான மேம்பாட்டுத் திட்டங்களுக்கான வளங்களைத் திரட்டுவதற்காக பிரிக்ஸ் நாடுகளால் 2015 ஆம் ஆண்டில் புதிய மேம்பாட்டு வங்கி (NDB) நிறுவப்பட்டது.
- ❖ பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை புதிய மேம்பாட்டு வங்கியின் நிறுவன உறுப்பு நாடுகளாகும்.
- ❖ வங்காளதேசம், ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து மற்றும் அல்ஜீரியா ஆகியவை இதன் பிற உறுப்பு நாடுகளாகும்.
- ❖ NDB-இன் தலைமையகம் ஷாங்காயில் அமைந்துள்ளது; இது தற்போதுள்ள பலதரப்பு

மற்றும் பிராந்திய நிதி நிறுவனங்களின் முயற்சிகளுக்குத் துணைபுரிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் பணப்பரிமாற்ற அதிகரிப்பு

- 2025-26 ஆம் நிதியாண்டில் தொழிலாளர்கள் அனுப்பிய பணமாக 100 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான தொகையை இந்தியா பெற்றுள்ளது; இது குறைந்த அந்நிய முதலீடுகள் மற்றும் மூலதன வெளியேற்றங்களுக்கு மத்தியில் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையைச் (BoP) பாதுகாக்க உதவியது.
- தொழிலாளர்களின் பணப்பரிமாற்றங்கள் 110.47 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது. இது 2024-25 நிதியாண்டை விட 26% அதிகமாகும்; அதேவேளையில் தனிப்பட்ட பரிமாற்றங்கள் 151.71 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்து உள்ளது.
- இந்தப் பணப்பரிமாற்றங்கள் பலவீனமான அந்நிய நேரடி முதலீடு (FDI) மற்றும் அந்நிய தொகுப்பு முதலீடு (FPI) வரவுகளை ஈடு செய்ய உதவியதோடு, அந்நியச் செலாவணி இருப்புகளையும் ஆதரித்தன.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது இந்த அந்நியச் செலாவணி வரவுகளை இருப்புகளை உருவாக்குவதற்கும், இந்திய ரூபாயின் (INR) மதிப்பு அதிக அளவில் உயர்வதைத் தடுப்பதற்கும் பயன்படுத்துகிறது.
- இந்தியாவின் பணப்பரிமாற்றங்களில் வளைகுடாப் பகுதியின் பங்கு 2016-17 ஆம் ஆண்டில் 47% ஆக இருந்த நிலையில், 2023-24 ஆம் ஆண்டில் 38% ஆகக் குறைந்துள்ளது; அதேசமயம் அமெரிக்கா (US) மற்றும் ஐக்கிய பேரரசின் (UK) பங்களிப்பு அதிகரித்து உள்ளது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## CAG-இன் மாநில நிதியியல் அறிக்கை 2024-25

- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) “மாநில நிதியியல் அறிக்கை 2024-25” எனும் அறிக்கையை வெளியிட்டார்.
- இந்த அறிக்கை 2015-16 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரையிலான அனைத்து 28

மாநிலங்களின் நிதியியல் மேலோட்டத்தை வழங்குகிறது.

- மாநிலங்களின் ஒருங்கிணைந்த நிலுவையில் உள்ள பொதுக் கடன் ₹75.52 லட்சம் கோடியாக உள்ளது, இது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 23.27%-க்குச் சமமாகும், அதே வேளையில் மொத்தப் பொறுப்புகள் GSDP-யில் 27.89%-ஐ எட்டியுள்ளன.
- மூலதன வரவுகளில் சுமார் 99% பொதுக் கடன்களிலிருந்தே வந்துள்ளன. இது மாநிலங்கள் தங்களது செலவினங்களுக்கு நிதியளிக்க பெருமளவில் கடன்களையே சார்ந்திருப்பதைக் காட்டுகிறது.
- 15-வது நிதிக்குழு நிர்ணயித்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3% என்ற அளவுகோலுக்கு மாறாக, 2024-25-ஆம் ஆண்டில் 18 மாநிலங்கள் பரிந்துரைக்கப்பட்ட வரம்பிற்கு மேல் நிதிப் பற்றாக்குறையைப் பதிவு செய்துள்ளன.
- மொத்தச் செலவினங்களில் வருவாய்ச் செலவினங்கள் 83.41% ஆகவும், மூலதனச் செலவினங்கள் 16.59% ஆகவும் மட்டுமே உள்ளன. இது ஒப்பீட்டளவில் சொத்துகளை உருவாக்கும் செலவினங்கள் குறைவாக இருப்பதைக் குறிக்கிறது.
- மத்திய வரிகள் மற்றும் தீர்வைகளின் பகிர்வில் மாநிலங்களின் பங்கு 2015-16 ஆம் ஆண்டில் 27.73% இலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் 31.76% ஆக அதிகரித்துள்ளது. அதே வேளையில் மானியங்கள் மொத்த வருவாய்ச் செலவினங்களில் சுமார் 8-10% அளவிலேயே உள்ளன என்பதோடு இவை முக்கியமாக எரிசக்தி மற்றும் விவசாயத் துறைகளுக்காக வழங்கப்படுகின்றன.




# இதரச் செய்திகள்

## QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசைகள் 2027

- 2027 ஆம் ஆண்டிற்கான QS (குவாக்கரெல்லி சைமண்ட்ஸ்) உலகப் பல்கலைக்கழகத் தரவரிசைகள் வெளியிடப்பட்டது, இதில் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் டெல்லி தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இந்தியாவின் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ள நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- உலகளவில் IIT டெல்லி 5 இடங்கள் முன்னேறி 118வது இடத்தைப் பிடித்துள்ளதுடன் இது 2027 ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் ஓர் இந்திய நிறுவனம் பெற்ற மிக உயர்ந்த இடமாகும்.
- உலகளவில் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் பாம்பே 134வது இடத்தையும், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் மெட்ராஸ் 170வது இடத்தையும் பிடித்துள்ளன என்ற நிலையில் உலகளாவிய முதல் 200 இடங்களில் உள்ள மற்ற இந்திய நிறுவனங்கள் இவை

மட்டுமேயாகும்.

- QS தரவரிசையில் இந்தியா 52 பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ளது; இதன்மூலம் அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, சீனா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக உலகளவில் இந்தியா 5-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT) தொடர்ந்து 15-வது ஆண்டாக உலகளாவிய தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளதுடன் அதனைத் தொடர்ந்து ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகம், இம்பீரியல் காலேஜ் லண்டன், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஹார்வர்டு பல்கலைக்கழகம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★